# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## GGY 2.12 – RESOURCES UTILIZATION AND SOCIAL GEOGRAPHY

எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) வளங்கள் என்பதனை வரையறை செய்க. (04 புள்ளிகள்)

ஆ) பின்வரும் அம்சங்களை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

i) மனித வளம் (04 புள்ளிகள்)

ii) புதுப்பிக்கக் கூடிய வளங்கள் (04 புள்ளிகள்)

iii) புதுப்பிக்க முடியா வளங்கள் (04 புள்ளிகள்)

iv) மீள் பாவனைக்கு உட்படுத்தக்கூடிய வளங்கள் (04 புள்ளிகள்)

02. அ) நிலையான அபிவிருத்தி (Sustainable Development) என்றால் என்ன? (05 புள்ளிகள்)

ஆ) நிலையான அபிவிருத்தியானது எவ்வாறு இயற்கை வளங்களோடு பின்னிப் பிணைந்து காணப்படுகின்றது என்பதனை உதாரணங்கள் தந்து விளக்குக. (15 புள்ளிகள்)

03. அ) "மசகெண்ணை (Crude oil) வளம் கொண்ட நாடுகள் அண்மைக் காலங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை சுருக்கமாகத் தருக (08 புள்ளிகள்)

ஆ) இந்நாடுகள் "எண்ணெய் வளப் பராமரிப்பினை" எந்தளவிற்குப் பேணுகின்றன என்பதனை விளக்குக. (12 புள்ளிகள்)

04. அ) "மனிதனின் வரையறையற்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வரையறைக் குட்பட்ட வளங்களைப் பயன்படுத்த முற்படும்போது பிரச்சினைகள் தோன்றுகின்றன." விளக்குக. (15 புள்ளிகள்)

ஆ) இதற்கான முகாமைத்துவ நடவடிக்கைகளை முன்வைக்குக. (05 புள்ளிகள்)